**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையிம் - 2020**

---

## 1.1 அபிப்பிராயம்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் (''அதிகாரசபை'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு நோக்கெல்லை**

------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல் விபரம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் படிகள் செலுத்தப்படாதக்கூடாத போதிலும் பணிப்பாளர் சபையால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அதிகாரசபையில் உயர் முகாமைத்துவத்தின் 27 உத்தியோகத்தர்களுக்கு 2018 மே மாதத்திலிருந்து செயற்பாட்டிற்கு | கணக்காய்வு அவதானிப்புகளை கருதிற்கொண்டு இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் பதவியணிக்கு செலுத்தப்பட்ட படி தொடர்பான அதிகாரசபைக்கு அதிகாரம் சாட்டப்பட்டிருந்த போதிலும், முகாமைத்துவ படியினை செலுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நல்லாளுகைக்கான பொது முளற்சிகள் வழிகாட்டி தொடர்பான 2003 இன் யூன் 02 ஆந் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பந்திக்கமைய உத்தியோகத்தர்களுக் |

| | | |
|---|---|---|
| வரும் வகையில் மாதமொன்றிற்கு ரூபா 50,000 முகாமைத்துவ படி செலுத்துப்பட்டிருந்தது. அது தொடர்பாக ரூபா 14,050,000 மொத்தப் படி 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருந்தது. | எனினும் 2002 இன் 34 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தினை கருத்திற்கொண்டு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கு வரையிலும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். | கு மேலதிக படிகளை வழங்குவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 237,151,840 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,348,801,346 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா 1,111,649,506 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக செயற்பாட்டு வருமானம் முந்தைய ஆண்டின் ரூபா 2,288,452,284 இலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 803,216,822 ஆக ரூபா 1,485,235,462 ஆல் குறைந்ததே இந்தச் வீழ்ச்சிக்கு முக்கியமாக பங்களித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| | 2020 (ரூபா மில்லியன்) | 2019 (ரூபா மில்லியன்) | முரண் (ரூபா மில்லியன்) | % |
|---|---|---|---|---|
| **செயற்பாட்டு வருமானம்** | **803** | **2,288** | **(1,485)** | **(65)** |
| வெளிநாட்டு விற்பனை மிகைக்கட்டணம் | 680 | 1,989 | (1,309) | (66) |
| Embarkation Levy சேவைக் கட்டணம் | 61 | 222 | (161) | (73) |
| ஒழுங்குமுறை சேவைகளிலிருந்தான வருமானம் | 62 | 77 | (15) | (19) |
| **செயற்பாடற்ற வருமானம்** | **183** | **216** | **(33)** | **(15)** |
| வட்டி வருமானம் | 168 | 199 | (31) | (16) |
| **பதவியணி செலவினங்கள்** | **354** | **333** | **21** | **06** |
| **நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்கள்** | **185** | **191** | **(6)** | **(3)** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் 60.6 சதவீதத்திற்கு சமமான ரூபா 1,517,846,213 ஆல் குறைவடைந்துள்ளது.

(ii) திறைசேரி உண்டியலின் மீதான வட்டி வருமானத்திலான 48 சதவீத வீழ்ச்சி காரணமாக, மீளாய்வாண்டின் வட்டி வருமானம் 16 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

| | 2020 | 2019 |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 1.7:1 | 1.6:1 |
| மூலதன விகிதம் | 62% | 63% |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் நிர்வாகக் கையேட்டின் (SLCAP-5000) 18.3.2(ஆ) பந்திக்கமைய போக்குவரத்து மற்றும் இயக்கக்ப் படிகளும் அதிகாரசபையினால் ஐந்து வருடத்திற்கு குறையாத காலப்பகுதியில் 10 சதவீதத்திற்கு குறையாமல் திருத்தம் செய்ய முடியும். எவ்வாறான போதிலும், கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக அதிகாரசபையின் பாதகமான நிதி நிலைமையைக் கருத்திற்கொள்ளாது, 2020 யூன் 23 ஆந் திகதி எடுக்கப்பட்ட பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் நிலுவை போக்குவரத்துப் படிகளாக ரூபா 9,286,520 ஆன படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | நிர்வாகக் கையேட்டின் (SLCAP-5000) உள்ள ஏற்பாடுகளுக்கமைய உரிய நேரத்தில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாவிட்டால், அதனை திருத்துவதற்கு உரித்துள்ளமையால், நிலுவைப் பணம் செலுத்தல் இடம்பெற்றுள்ளது. அதன் பிரகாரம் உரிய தீகதியிலிருந்து போக்குவரத்துப் படிகளை திருத்தியமைப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்துள்ளது. இந்த கொடுப்பனவிற்காக பாதீட்டு நிதியேற்பாடு காணப்படுவதுடன், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை குறித்த வருடத்தில் இலாபமீட்டியுள்ளது. அதன் பிரகாரம் பதவியணியின் நிதி இடர்பாடுகளை கருத்திற்கொண்டு சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை இந்த பொதுவான கொடுப்பனவை செலுத்த தீர்மானித்தது. நிதி நட்டமொன்று ஏற்பட்டால் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை இந்த கொடுப்பனவை மேற்கொள்ளாது. | கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக அதிகாரசபையின் பாதகமான நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு செலவினங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டுக்கான வரிக்கு பின்னரான | நிர்வாகக் கையேடு (SLCAP 5000) விதிகளைப் பின்பற்றி, | கொவிட் - 19 தொற்றுநோய் |

இலாபமானது கடந்த வருடத்தின் ரூபா 1,348,801,346 இலிருந்து ரூபா 236,772,763 வரை ரூபா 1,112,028,583 அல்லது 82.5 சதவீதம் குறைந்துள்ளது. செயலாற்றல் அறிக்கையின்படி, தொற்றுநோய் காரணமாக அனைத்து துறைகளிலும் செயல்திறன் குறைந்துள்ளது. மேலும், நாடு மற்றும் குறிப்பிட்ட பகுதிகள் அவ்வப்போது பூட்டப்பட்டதால், அதிகாரசபையின் ஊழியர்கள் வீட்டிலேயே தங்கி வீட்டிலிருந்து வேலை செய்ய அனுமதிக்கப்பட்டனர். எவ்வாறாயினும், அதிகாரசபையானது அந்த நிலைமைகளைக் கருத்தில் கொள்ளாமல் மீளாய்வின் கீழ் வருடத்திற்கான ஊழியர்களுக்கு ஒரு மாத சம்பளத்தின் சாதாரண விடுப்பு பணமாக ரூபா 10,428,105 செலுத்தியுள்ளது மற்றும் இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 37 சதவீதம் அல்லது ரூபா 3,928,028 ஆன அதிகரிப்பு ஆகும். இந்த முடிவு சர்ச்சைக்குரியதாகவும், நியாயப்படுத்த முடியாததாகவும் அவதானிக்கப்பட்டது.

பணம் செலுத்துவதற்கான உரிய அங்கீகாரங்களுடன் விடுப்பு சம்பளம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த கட்டணத்திற்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் காணப்பட்டன. மேலும், குறிப்பிட்ட ஆண்டில் சிவில் விமான சேவைகள் அதிகாரசபை இலாபம் ஈட்டியது. எனவே, ஊழியர்களின் நிதிச் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு இந்த வழக்கமான கட்டணத்தைச் செலுத்த முடிவு செய்தது. நட்டம் ஏற்பட்டிருந்தால் சிவில் விமான சேவைகள் அதிகாரசபை இந்த கட்டணத்தை செலுத்தியிருக்காது.

நிலைமை காரணமாக அதிகாரசபையின் பாதகமான நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு செலவினங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.